பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 25 | செவ்வாய்க்கிழமை | 10.09.2024 | அதிர்வு 039

## யாழில் அடிகாயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் 06▶

# தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழினத்தின் குறியீடு!




## தீர்வுக்கான பாதையைத் திறக்கும் என்று சிறீதரன் எம்.பி. நம்பிக்கை

"தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது தனிய ஒரு நபருக்கு அல்ல. இது தமிழினத்தின் ஒரு குறியீடாகும். இந்தக் குறியீடு எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கான மிகப் பெரிய பாதையைத் திறப்பதாக அமையும். எனவே, இது ஒரு தொடக்கமே தவிர இது ஒரு முடிவு அல்ல."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06▶

# சந்திரகுமாரின் கட்சியின் பதிவு தேர்தல் ஆணைக்குழுவால் இரத்து

(ந.லோகதயாளன்)

சந்திரகுமார் தலைமையிலான அரசியல் கட்சியின் பதிவு தேர்தல்கள் ஆணைக்குழுவால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி 3 வருடங்களுக்கு முன்பு ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கடசியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலம் முதல் இன்று வரை அந்தக் கட்சியின் கணக்கு அறிக்கையைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கட்சி சமர்ப்பிக்கவில்லை. கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு 3 தடவைகள் 06▶



# இராஜாங்க அமைச்சர் கீதாவும் சஜித்துக்கு ஆதரவு தெரிவிப்பு




மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்குத் தமது 06▶



அரச ஊழியர்கள் ஏழு லட்சத்துக்கு அதிகமானோர் தபால் மூலம் வாக்களிக்க இருந்த சமயத்தில் அரச ஊழியர்களுக்கு பெரும் சம்பள உயர்வை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று அரசு தரப்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பு பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றது.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தலில் ஒரு வேட்பாளராக போட்டியிடுகின்றமையால், அரச ஊழியர்களை அவருக்கு ஆதரவாக வாக்களிக்க தூண்டும் விதத்தில் – அதாவது லஞ்சம் வழங்கும் போக்கில் – இந்த அறிவிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக இப்போது அர்த்தப்படுத்தப்படுகின்றது.

இந்த அறிவிப்பு தேர்தல் 06▶




# கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட நிலங்களை கையளிக்க ஏற்பாடு

கிளிநொச்சி – பச்சிலைப்பள்ளி பகுதியில் நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டுள்ள நிலப்பரப்பு விரைவில் கையளிக் கப்படவுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் மற்றும் முகமாலை பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளே அகற்றப்பட்டுள்ளன.

இதன்படி, 11லட்சத்து 42 ஆயிரத்து 563 சதுர மீற்றர் பகுதியிலுள்ள நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப் பாளர் உள்ளிட்ட பலர் பார்வையிட்டுள்ளனர்.



# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கப்டனின் வாக்குமூலப் பிரதிகள் நீதிமன்றத்தில்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து தொடர்பில் அந்தக் கப்பலின் கப்டன் மற்றும் கொழும்புத் துறைமுக கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வழங்கியுள்ள வாக்குமூலத்தின் பிரதிகளை, நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் மற்றும் மீனவ சமூகத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போதே, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் இதனை அறிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடக் கோரி இந்த அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புகள் செப்டம்பர் 11 முதல் நிறுத்தப்பட வேண்டும்

2024 ஆம் வருடத்துக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்ட அனைத்து மேலதிக வகுப்புகள், விரிவுரைகள் அல்லது பயிற்சிப் பட்டறைகள் அனைத்தும் நாளை செப்டம்பர் 11 நள்ளிரவு முதல் நிறுத்தப்பட வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ள பரீட்சைகள் திணைக்களம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், புலமைப்பரீட்சைக்கான ஊகத்தின் அடிப்படையிலான வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரங்களை அச்சிடுவதற்கும் வெளியிடுவதற்கும் தடைவிதித்துள்ளது.

பரீட்சை வினாப்பத்திரத்திலுள்ள வினாக்களைத் தருவதாகவோ அல்லது அதற்குச் சமமான வினாக்களை வழங்குவதாகவோ சுவரொட்டிகள், பதாகைகள், கையேடுகள் மூலம் வெளிப்படுத்தவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதற்கும் பகிர்வதற்கும் முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

காட்டு யானை தாக்கி மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை கொக்கல்ல பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

அம்பலாந்தோட்டை, கொக்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் தனது பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்த யானைக் கூட்டத்தைத் துரத்துவதற்காகப் பிரதே மக்களுடன் இணைந்து சென்றிருந்தபோது யானைகளில் ஒன்று தாக்கி உயிரிழந்துள்ளார் என்று அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்துக்குள் அடிக்கடி காட்டு யானைகள் கூட்டமாக நுழைவதால் அதிகளவான சொத்துக்களுக்கும் மற்றும் உயிர்களுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்



# ரிஷாத்தின் சகாக்கள் பலர் ரணிலுக்கு ஆதரவு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்குத் தமது பூரண ஆதரவை வழங்குவதாக ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் பலரும் தெரிவித்தனர் என்று ரணிலின் தேர்தல் பிரசார ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அலிகான் ஷரீப், முசலி பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஜீ.எச். சுபிஹான், முசலி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.ரஸ்மின், ஹனீப் மக்பூல், எம்.எச்.எம்.காமில், அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் மற்றும் முசலி உலமா சபை முன்னாள் தலைவர் எம்.தௌபீக் உள்ளிட்ட கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமது ஆதரவை வெளியிட்டனர்.

வடக்கிலுள்ள முக்கிய பிரதேச சபைகளில் ஒன்றான முசலி பிரதேச சபையின் ஒரே ஒரு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் தவிர அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதோடு, நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில் எமது கட்சி ஆரம்பம் முதலே இருந்தது எனவும், கட்சித் தலைமையும் அந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தது எனவும் கட்சி முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆனால், கட்சியிலுள்ள சிலரது அழுத்தம் காரணமாக கட்சியின் தலைவர் வேறு வேட்பாளரை ஆதரிக்க முடிவு செய்தார். இருந்தாலும் எமது கட்சியின் பெரும்பான்மையானவர்களின் ஆதரவு ஜனாதிபதிக்கே வழங்கப்படுகின்றது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஏனைய வேட்பாளர்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய நிலையில் நாட்டை ஏற்று முன்னேற்றக் கூடிய ஒரே தலைமை ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே எனவும், கட்சி அரசியலுக்கு அப்பால் அவரை ஆதரிப்பதே உகந்தது எனவும் தெரிவித்த அவர்கள், கட்சித் தலைமையும் தனது முடிவை மாற்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

புத்தளம் – மன்னார் வீதியைத் திறப்பது உட்பட வடக்கு முஸ்லிங்களுடன் தொடர்புள்ள பல பிரச்சினைகளைத் தாம் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர் எனவும், அவற்றுக்கு ஜனாதிபதி சாதகமான பதில் வழங்கினார் எனவும் மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷர்ரப், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராஜித சேனாரத்ன மற்றும் களுத்துறை நகர சபை முன்னாள் மேயர் ஆமிர் நாஸிர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர் என்று ரணிலின் தேர்தல் பிரசார ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சஜித்தின் கூட்டத்தில் பட்டாசு வெடிப்பு! ஆறு பொலிஸார் உட்பட 8 பேர் காயம்!!

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் கொண்டு வந்த பட்டாசுகள் வெடித்ததில் 6 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று கண்டியில் இடம்பெற்றுள்ளது.

பேரணி ஆரம்பிக்கப்படுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் சஜித் பிரேமதாஸவின் ஆதரவாளர்கள் பட்டாசுகளைக் கொளுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.





# பொதுக் கட்டமைப்பின் வேட்பாளருக்காக ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் பிரசாரம்

தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை ஆதரித்து இன்று யாழ்.ஊர்காவற்துறை பகுதியில் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் அதிக வாக்குகளை பெற்றுக்கொள்ள வேண் டும் என ஊர்காவற்துறை – தம்பாட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகள் செய்து தேங்காய் உடைக் கப்பட்டது.

தொடர்ந்து ஆலய பிரத குரு அவர்க ளுக்கு சம்பிரதாய பூர்வமாக துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு பின்னர் ஊர்காவற்துறை நகர பகுதியில் பிரசார பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண மீனவ அமைப்புக ளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த தேர்தல் பிரசாரத்தில் அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வட மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா, யாழ்.வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமா சங்களின் உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம், மீனவர் அமைப்புக்க ளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மக்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கிவைத்தனர்.



# ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள் 20 ஆம் திகதி பாடசாலை விடுமுறை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு செப்டெம்பர் 20 ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளும் மூடப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரப்பட் டமைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், செப்டெம்பர் 20 ஆம் திகதி பாடசாலைகள் மூடப்பட்டு செப் டெம்பர் 23 அன்று மீண்டும் திறக்கப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்குச் சாவடி நிலையங் களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலை கள் செப்டம்பர் 19 ஆம் திகதியன்று கல்வி நடவடிக்கைகள் நிறைவடைந் ததும் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேலும் வாக்களிப்பு நிலைய நடவடிக்கைகளுக்குத் தேவையான மேசைகள், கதிரைகள் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப் பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு அறி விக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதிமுறை மீறல் என்று தேர்தல் ஆணையமும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் விசனத்துடன் தெரிவித்து வருகையில், புதிய குண்டு ஒன்றைத் தேர்தல் ஆணையம் தூக்கிப் போட்டு இருக்கின்றது.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கும் முடிவு அமைச்சரவைத் தீர்மானம் என்று காட்டி அரசு தரப்பு அறிவித்தாலும், அத்தகைய அமைச்சரவைப் பத்திரமோ, ஆவணமோ, அமைச்சரவைக் கூட்டத் தீர்மானமோ இல்லை என்பதை தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்தி இருக்கின்றது.

ஆக, அமைச்சரவை எடுக்காத ஒரு தீர்மானத்தை அமைச்சரவை எடுத்ததாகப் பொய் கூறி, அரச ஊழியர்களான வாக்காளர்களை தவறாக வழிநடத்தி, வாக்குச்சுருட்டும் அற்பத்தனம் அரசு கட்டமைப்பின் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தரப்பினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றமை அம்பலமாகி இருக்கின்றது.

இந்த சுத்துமாத்துக்காக ரணில் விக்கிரமசிங்க பெரும் நெருக்கடியை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றே தோன்றுகின்றது.

+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியை மத்திய குழு வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை கூடுகின்றது என்று குறிப்பிட்டிருந்தேன்.

ஜனாதிபதித்தேர்தல்தொடர்பாகஆராய்வதற்காக கட்சியின் மத்திய குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஐவர் குழு இன்று ஆறு பேர் குழுவாக வவுனியாவில் கூடுகின்றது.

கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜ, செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., சிறிதரன் எம்.பி. ஆகிய ஐவரே இக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கிழக்கிலிருந்து ஒருவரும் இக்குழுவில் இல்லை என்று கூறப்பட்டமையால் மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன் ஆறாவது உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றார் என்று கூறப்பட்டது.

இவர்கள் அறுவரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய்வதற்காக இன்று காலை எட்டு முப்பது மணிக்கு சந்திக்கின்றார்கள்.

## தமிழ்ப் பொது வேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானம் எடுத்தாலும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவில் நீங்கள் உறுதியாக இருப்பீர்களா?” – என்று இலண்டன் சென்றிருந்த சிறீதரன் எம்.பியிடம் “வணக்கம் இலண்டன்“ இணையத்தளம் கேள்வி எழுப்பியிருந்தது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் 8 – 10 இலட்சம் வாக்குகளைப் பெற்றுவிட்டார் எனில் அது வெற்றி என்று கருதப்படமாட்டாது. அது தமிழ் மக்கள், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வழங்கிய ஓர் ஆணையாகும்.

குறிப்பாக நாங்கள் எதிர்பார்ப்பது, வடக்கு – கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் 51 வீதமான வாக்குகளை எங்களுடைய தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் அதாவது “சங்கு” சின்னம் பெற்றுக்கொண்டாலே அது மாபெரும் வெற்றியாகும். ஏனெனில் இதனூடாக 51 வீதமான தமிழ் மக்கள் மிகப்பெரிய ஆணையை வழங்கியுள்ளார்கள் என்ற செய்தி உலகத்துக்குச் சொல்லப்படும்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தான் தமிழ்ப் பொது வேட்பாளர் முதன் முதலாகக் களமிறக்கப்பட்டுள்ளார். எனவே, இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் தற்செயலாகக் குறைந்தளவு வாக்குகளைப் பெற்றால் அது தோல்வி என்று அர்த்தப்படாது. அது தமிழர்களுக்குத் தோல்வி அல்ல. ஏனெனில், நாங்கள் வடக்கு – கிழக்கில் பெருமளவு வாக்குகளைப் பெறுவதால் ஜனாதிபதியாக வரப்போவதும் இல்லை. பெருமளவு வாக்குகளைப் பெறாமல் தோற்பதால் ஜனாதிபதிப் பதவியை இழந்தோம் என்ற வரலாறும் இல்லை. ஆனால், இதனூடாக ஒரு செய்தி தென்னிலங்கைக்கும் – உலகத்துக்கும் சொல்லப்படுகின்றது. நாங்கள் இந்த மண்ணிலே இழந்துபோன இறைமையை மீட்டெடுக்கவும், நாங்கள் மீண்டும் எங்கள் மண்ணில் ஆட்சியுரிமையுடன் வாழ்வதற்குமான ஒரு களத்தைத் திறந்திருக்கின்றோம் என்பதே அந்தச் செய்தி.

இந்த ஆரம்பம் ஒரு தொடக்கமே. அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாங்கள் இவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளரைத் தொடர்ந்து களமிறக்க வேண்டும். அது அரியநேத்திரன் அல்ல வேறு எவராகவும் இருக்கலாம்.

தமிழ்ப் பொது வேட்பாளரைத் தொடர்ந்து களமிறக்குவதால் தென்னிலங்கை வேட்பாளர்களும் சரி – தென்னிலங்கை கட்சிகளும் சரி – சிங்கள சகோதரர்களும் சரி தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் பிரச்சினை இருக்கின்றது, அதற்குத் தீர்வு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுப்பார்கள்.

எனவே, நாங்கள் ஓர் இனமாக எங்களை அடையாளப்படுத்துவதற்கு இந்தத் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் மிகப் பெரிய ஒரு கருவியாக மாறும்.

வடக்கு – கிழக்கு தமிழர்களின் பூர்வீக நிலம். இந்தப் பூர்வீக நிலத்திலே தமிழர்கள் இழந்துபோன இறைமையை மீட்டெடுப்பதற்குச் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு பாதையைத் திறக்க வேண்டும். அதற்கான கோரிக்கையாகவே இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். ஆகவே, தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது தனிய ஒரு நபருக்கு அல்ல. இது தமிழினத்தின் ஒரு குறியீடாகும். இந்தக் குறியீடு எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கான மிகப் பெரிய பாதையைத் திறப்பதாக அமையும். எனவே, இது ஒரு தொடக்கமே தவிர இது ஒரு முடிவு அல்ல.” – என்றார்.

## சந்திரகுமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடிதம் அனுப்பியும் பதில் அளிக்காத காரணத்தினாலேயே தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு சமத்துவக் கட்சியின் பதிவை நீக்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஜனாதிபதித் தேர்தலுக்காக 2024.07.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச இதழில் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் சமத்துவக் கட்சி உட்பட 78 கட்சிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டிருந்தன. அதன்பின்னர் எம்பிலிப்பிட்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிப்பின் பின்னர் 2024.08.26 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிட்ட 2399/14 இலக்க அரச இதழில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் சமத்துவக் கட்சியின் பெயர் நீக்கப்பட்டு 77 அரசியல் கட்சிகளின் பெயர்ப்பட்டியலே வெளியிடப்பட்டுள்ளது.

முருகேசு சந்திரகுமார் தலைமையிலான அரசியல் கட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் சின்னமாக கேடயம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்தக் கட்சியின் பதிவு தேர்தல்கள் ஆணைக்குழுவால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்திரகுமாரின் கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆதரவை வழங்கியுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேடை ஏறி ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கான தமது ஆதரவை அவர் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

## யாழில் அடிகாயங்களு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த கஜேந்திரன் (வயது 43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

அந்தப் பகுதியில் புதிதாகக் கட்டப்படும் கட்டடம் ஒன்றின் அருகில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தில் அடிகாயங்கள் காணப்பட்ட நிலையில், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று தடயவியல் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை

**கனிஸ்ரா ஜெயகாந்தன்**
(ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக 2024 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த தேர்தலுக்காக 40 வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்திய போதும், தேர்தல் விதிமுறைகளை மீறியமை காரணத்தினால் - ஒரு வேட்பாளரின்மனு நிராகரிக்கப்பட்டு தற்போது 39 வேட்பாளர்கள் பேட்டியிடிகின்றனர்.

இவ்வருட தேர்தல் களமானது இலங்கை வரலாற்றில் அதிகளவிலான வேட்பாளர்கள் ஜனாதிபதி பதவிக்காக பேட்டியிடும் தேர்தல்களமாக பார்க்கப் படுகின்றது. அந்த வகையில் இலங்கை வரலாற்றில் இதுவரை நடைபெற்ற 8 ஜனாதிபதி தேர்தல்களும் முறையே 1982 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவதாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது 06 வேட்பாளர்களும், 1988ஆம் ஆண்டு 03 வேட்பாளர்களும், 1994 ஆம் ஆண்டு 06 வேட்பாளர்களும், 1999 ஆம் ஆண்டு 13 வேட்பாளர்களும், 2005 ஆம் ஆண்டு 22 வேட்பாளர்களும், 2019 ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது 35 வேட்பாளர்களும் போட்டியிட்ட நிலையில் இந்த வருடம் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைகளை விட அதிகமான வேட்பாளர்கள், ஜனாதிபதியின் பதவிக்காக போட்டியிடுகின்றனர்.

இலங்கையில், 1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி தேர்தல் சட்டத்தில் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றிற்கு, ரூபா 50,000 கட்டுப்பணமாகவும், சுயேச்சை வேட்பாளர்களுக்கு 75,000 ரூபா கட்டுப்பணமாகவும் அறவிடப்படுகின்றது.

இந்த நிலையில் - இரண்டுகோடி 20 இலட்சம் சனத்தொகையை கொண்ட எமது நாட்டில் 2024 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு கோடி 71 இலட்சத்து 80 ஆயிரம் பேர் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஜனாபதி தேர்தலுக்கான வர்த்தமானி வெளியாகியமைத் தொடர்ந்து, அத்தினத்தில் இருந்து 10 நாஆகளுக்குள் தபால் மூலமாக வாக்களிப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் கோரப்பட்டன. அதற்காக கடந்த ஒகஸ்ட் 05 ஆம் திகதி வரை 7 இலட்சத்து 36 ஆயிரத்து 589 பேர் விண்ணபித்துள்ள நிலையில்அவர்களில் 7 இலட்சத்து 12ஆயிரத்து 321 பேர் தபால் மூலமாக வாக்களிப்பிற்கு தகுதி பெற்றுள்ளனர். இத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களில், 24,260 பேரின் விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தபால் மூலமாக வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் வாக்களிப்பதற்கு கடந்த 4,5,6 ஆம் திகதிகள் வழங்கப்பட்டன. அந்தத் திகதிகளில் வாக்களிக்கத் தவறுபவர்கள் 11,12 ஆம் திகதிகளில் (நாளையும் மறுநாளும்) தபால் மூலமாக தமது வாக்குகளை அளிக்க முடியும்.

எமது நாட்டில் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கும், தேர்தல் கடமைகளில் பணியாற்றவுள்ளவர்களுக்கும் தபால் மூலமான வாக்களிப்பிற்கு விண்ணப்பித்துள்ள நிலையில், அதிகளவிலான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமாகவும் இம்முறை கருதப்படுகின்றது.

அரச பதவிகளில் இருக்கும் அதிகாரிகளுக்கே இவ்வாறான நிராகரிப்புக்கள் ஏற்படுகின்றன என்றால், வாக்களிப்பதற்காக காத்திருக்கின்ற சாமனிய வாக்காளர்களுக்கும் பல சவால்கள் காணப்படுகின்றன என்பதனை எவரும் மறுத்துவிட முடியாது. இவ்வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைமுறைகளும் மக்களுக்கு சற்று புதிய விடயமாகவே காணப்படுகின்றது.

அந்தவகையில் இந்தவருட ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பும் - விருப்பு வாக்களிப்பு முறைமையை அடிப்படையாகக் கொண்டே அமையப்பெறுகின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது பின்வரும் மூன்று வழிமுறைகளின் ஊடாக மக்கள் தமது விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

- வழிமுறை I - வாக்காளர் யாதேனும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பின், அவரின் பெயருக்கு நேராக எதிரில் உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில்1 என இலக்கமிடவும் முடியும். அல்லது புள்ளடியிட முடியும்
- வழிமுறை II - இருவருக்கு வாக்களிக்க விரும்பின், வாக்காளர் ஒருவர் தான் விரும்பிய வேட்பாளரின் பெயரிற்கு நேரே எதிரில் உள்ள சின்னத்திற்கு அருகே உள்ள பெட்டியில் 1 எனவும், இன்னொருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு தெரிவு ஒழுங்கில் இரண்டு வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடியும்.

தொடர்ச்சி▼



# வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை

தொடர்ச்சி▲

● வழிமுறை III - மூன்று நபர்களுக்கு வாக்களிக்க விரும்பின் , வாக்காளர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே எதிரில் உள்ள சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டியில் தனது விருப்பத்தெரிவிற்கு ஏற்ப விருப்பத்தின் அடிப்படையில் 1எனவும், இன்னொருவருக்கு 2 எனவும், மற்றுமொருவருக்கு 3 எனவும் இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு ஒழுங்கில் வாக்களிக்க முடியும்.

தேர்தலில் வாக்களிக்கும் போது வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டிய மிக முக்கிய விடயமாக, தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிக்க விரும்பினால் 1 என இலக்கமிடவும் முடியும். அல்லது அவரது பெயர் சின்னத்துக்கு அருகே புள்ளடியிட முடியும். ஆனால், ஒன்றிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்க விரும்பின் இலக்கங்களை மாத்திரம் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கும் போது இலக்கங்களும், ஆங்கில எழுத்துக்களும்(புள்ளடியும்) இணைந்த வகையில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் நிராகரிக்கப்படும் என்பதனை கருத்தில் கொண்டுசெயற்படவேண்டும்.

வேட்பாளர் ஒருவர் முதல் சுற்றிலேயே ஜனாதிபதியாகத் தெரிவாக வேண்டும் எனின், செலுத்தப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துக்கு மேலதிகமாக ஒரு வாக்கு மேல் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிடின், தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டாவது வாக்கெண்ணும் முறையினை பின்பற்றும்.

இரண்டாம் சுற்று வாக்குக் கணக்கெடுப்பின் போது முதல் இரண்டு இடங்களைப் பெற்ற வேட்பாள்ர்கள்தான் போட்டியில் இருப்பர். அந்த இருவர் தவிர்ந்த ஏனையோருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் அடுத்தடுத்த தெரிவுகள் கவனத்தில் எடுக்கப்படும். அத்தகைய வாக்கில் அந்த இருவரில் ஒருவருக்குஅடுத்ததெரிவுகுறிக்கப்பட்டிருக்குமானால் அந்த வாக்கு அந்த வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்காகக் கணிக்கப்படும்.

அப்படி இரண்டாம் சுற்றுக் கணக்கிட்ட பின்னர் அந்த இருவரில் யாருக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளனவோ அவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

தபால் மூலமாக வாக்களிக்கும் வாக்காளர்களைத் தவிர்ந்த ஏனைய வாக்காளர்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி தனது ஜனநாயக கடைமையை நிறைவேற்றும் வகையில் வாக்களித்து அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்தற்கான உரிமையுண்டு.

எமது நாட்டில் வாழுகின்ற அனைத்து தரப்பு மக்களுக்கும் பாராபட்சம் காட்டாது அபிவிருத்தி திட்டங்களை மேற்க்கொள்ள கூடிய, மக்களின் தேவைகளை அறிந்து செயற்படக்கூடிய ஒரு நபர் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது. எவருடைய அச்சுறுத்தல்கள் - மிரட்டல்களுக்கும் பயப்படாது, எமக்கு சரியான தலைவரை நாமே தெளிந்த சிந்தையுடன் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக்கடமை - யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் உரிமை.

‘உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்?’ என்பது போல சரியான தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்குரிமை எம்மிடம் காணப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி நாட்டிற்கும் , எமக்கும் மிகப்பொருத்தமான தலைவரை தெரிந்தெடுப்போம்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வினை விலகாது

நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் மும்முனைப் போட்டி மிகத் தீவிரமாகி இருக்கின்றது. வெற்றி யாருக்கு என்பது இறுதிவரை இழுபறியாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இரண்டாவது சுற்று வாக்குக் கணக்கெடுப்பு நிச்சயம் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. சர்வதேச மெய் வன்மை நிகழ்வுகளின் குறுந்தூர ஓட்டங்களில் வெற்றி பெறுபவரை தீர்மானிக்க 'போட்டோ பினிஷ்' தேவைப்படுகின்றது. எந்த மெய்வல்லுனனின் முண்டம் வெற்றிக் கோட்டை முதலில் தொட்டது என்பதை சாதாரண கண்களினால் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கும். அதனால் போட்டோ பினிஷ் பிரேம்கள்தான் முடிவு செய்யும். அது போல, அத்துணை தூரம் இந்தத் தடவை ஜனாதிபதித் தேர்தல் இறுதி முடிவு மிக நெருக்கமாக இருந்தாலும் அது புதினமாக இருக்காது. நிலைமை அப்படித்தான் கடும் போட்டியாக உள்ளது.

எனினும், இப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தத் தேர்தலில் தோல்வி என்பது வெறும் பதவி - அதிகார - இழப்பு என்பதோடு அமைந்து விடாது என்பது திண்ணம்.

பதவியை இழந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றுக்கு அலைவதும், நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் தமக்கு விதிக்கப்பட்ட தண்டங்கள், அபராதங்களைச் செலுத்துவதற்காக அவர் தமது சொத்துக்களை விற்றுச் சுத்தி அலைவதும் கண் முன் நடக்கும் சம்பவங்கள்.

அந்தக் கதி இந்தத் தேர்தலில் பதவியை இழந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் காத்திருக்கும். தேர்தலில் வென்றால் கூட, அந்தத் தேர்தல் வெற்றிக்கு எதிரான வழக்குகளுக்கு சாத்தியமான பல காரணங்கள, வாய்ப்புகள் தாராளமாக உள்ளன. இந்தச் சூழலில், ஜனாதிபதிப் பதவியில் அவர் நீடிக்க முடியாதவாறு தேர்தல் முடிவு வரும் எனில், அதன் பின்னர் சட்ட - நீதித்துறையுடன் அவர் அக்கப் போர் நடத்துவதற்கு பல குசும்புகளை அவர் இப்போதே செய்து வைத்திருக்கின்றார் என்பதை மறுப்பதற்கு இல்லை.

ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலை நிதி அமைச்சர் என்ற முறையில் தேர்தல் நிதியை வெட்டி, நடத்தவிடாமல் குழப்பியடித்தமைக்காக உயர் நீதிமன்றத்தின் மோதிர விரலால் அவர் குட்டு வாங்கி இருக்கின்றார். அவர் ஜனாதிபதிப் பதவியைத் துறந்த பின்னர் அந்தக் குற்றத்திற்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கும் படி கோரி உயர்நீதிமன்றுக்கு விண்ணப்பம் செய்யப்படுமானால் அவருக்குச் சிக்கல் வரலாம்.

அதேசமயம் ஜனாதிபதி வேட்பாளரான தமக்கு ஆதரவு தராமைக்காக நான்கு ராஜாங்க அமைச்சர்களை அவர் பதவி நீக்கம் செய்திருக்கின்றார்.

இப்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கும்ராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவுக்கு எதிராகவும் அவர் நடவடிக்கை எடுக்கக்கூடும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவித்து, தபால் மூல வாக்களிப்பு நடைபெற இருக்கையில் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்கும் அறிவிப்பை அவர் வெளியிட்டமை தேர்தல் விதிமுறை மீறல் என்று தேர்தல் ஆணையமே ஏற்கனவே அறிவித்து விட்டது.

இப்படி ஊழியர்கள் வாக்களிக்க இருக்கையில் அவர்களுக்கு சம்பள உயர்வு என்று அறிவித்தமை, தமக்காகப் பிரச்சாரம் செய்யாத அமைச்சர்களைப் பதவி நீக்கியமை போன்றவை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான 1981ஆம் ஆண்டின் 78ஆம் மற்றும் 79ஆம் இலக்கச் சட்டங்களை மீறும் - லஞ்சம் வழங்கி வாக்குகளை பெறுதல், அச்சுறுத்தி வாக்குகளை பெறுதல் வகையிலான செயல்களை என அர்த்தப்படுத்தப்படலாம் என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் சுட்டிக்காட்டி உள்ளது.

இந்தத் தவறுகள், இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வென்றாலும் தோற்றாலும் அவருக்கு வினையாகத் தொடர்ந்து தொல்லை தரக்கூடியவை என்பதை மறுப்பதற்கு இல்லை.

# இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையினை மீண்டும் நடத்தவேண்டும்

## தமிழ்நாடு மீனவத் தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்



நீண்டகாலமாக நடைபெறாமல் இருக்கும் இந்திய - இலங்கை மீனவர் பேச்சுவார்த்தையை விரைவில் மீண்டும் நடத்த வேண்டும் என தமிழ்நாடு மீனவத் தொழிலாளர் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

தமிழ்நாடு மீனவத் தொழிலாளர் சங்கத்தின் (ஏ.ஐ.டி.யு.சி) மாநிலச் செயலாளர் சி. ஆர்.செந்தில் வேல், இராமேஸ்வரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“1983-ஆம் ஆண்டு துவங்கி இப்போது வரையிலும் இலங்கை கடற்படையினரால் நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள், ஆயிரக்கணக்கான மீனவர்கள் தாக்குதல்களுக்கும், உடல் ஊனப்படுத்தப்பட்டும், பலர் படகுகளை இழந்து வாழ்க்கையை பறிகொடுத்து உள்ளனர். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மீனவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வரும் சூழலில், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் ஆக்கபூர்வமான திட்டங்களை கையாளவில்லை. இதனால் பிரச்சினை மேலும் மேலும் தீவிரம் அடைந்து வருகிறது.

இலங்கையை அண்மித்துள்ள, மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் தான் தமிழகத்தின் 80 சதவீத மீன்பிடிப்பு உள்ளது. இந்த இரண்டு கடல் பகுதிகளும் மிகவும் குறுகிய எல்லை கொண்டவை. இந்தப் பகுதிகளில் தொன்று தொட்டு இருநாட்டு மீனவர்களும் மீன் பிடித்து வந்தனர். இருநாட்டு மீனவர் பேச்சுவார்த்தை: இருநாட்டு மீனவர்களும் சுமுகமான முறையில் மீன்பிடி தொழிலை மேற்கொள்ள மீனவர்களை கொண்ட பேச்சுவார்த்தை, கடந்த 2010 துவங்கி பல கட்டங்களாக நடைபெற்றது. கடைசியாக 2016 நவம்பரில் டில்லியில் அன்றைய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

அந்தப் பேச்சுவார்த்தையில், பாக் ஜலசந்தி கடல் பகுதியில் இழுவலைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறுத்திக் கொள்வது எனவும், அத்தொழிலில் ஈடுபட்டு வரும் தமிழக மீனவர்களுக்கு மாற்றுத்திட்டங்களை மத்திய அரசு வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. அதுவரை இந்திய - இலங்கை கடல் எல்லைப் பகுதியில் எந்த ஒரு மீனவர்கள் மீதும் தாக்குதல் தொடுக்க கூடாது, கைது செய்யக் கூடாது, படகுகளை சேதப்படுத்தக் கூடாது எனவும் முடிவு செய்யப்பட்டது. இதனை கண்காணிக்க இரு நாட்டு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவும் தேர்வு செய்யப்பட்டது. அந்தக் குழுவும் பெயரளவில் இரண்டு முறை கூடியது.

இரு நாட்டு அதிகாரிகளைக் கொண்ட பேச்சுவார்த்தை எல்லாம் தோல்வியிலேயே முடிந்துள்ளன. இதற்கு முக்கியக் காரணம், பாக் ஜலசந்தி கடற்பகுதியில் இழுவலைகளை படிப்படியாக குறைக்க மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு தோல்வி அடைந்தது. இதுவே பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறாமல் போனதற்கு காரணமாகவும் அமைந்தது.

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண, விரைவில் இரு நாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தையை மீண்டும் துவங்க வேண்டும்.” - என்றார்.

# தமிழக மீனவர்களை மீட்பதற்கு தூதரக முயற்சிகள் வேண்டும்

## வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

“இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. கடந்த 7 ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது மூன்று மீன்பிடி விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் மட்டும் 350 மீனவர்கள் மற்றும் 49 மீன்பிடிப் படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு ஆண்டுகளில் இது மிக அதிகமானது. மேலும், இலங்கை நீதிமன்றங்கள், மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருகின்றன.

இலங்கை அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள், தமிழக மீனவர்கள் அங்கு சிறையில் இருக்கும் காலத்தை நீடிக்க வழி செய்வதோடு, ஏற்கெனவே துயரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி அவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பிற்கும் வழி வகுக்கும்.

எனவே, இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்யவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தைக் விரைந்து நடத்திடவும் வேண்டும். இதில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.








# ரஷ்ய எரிபொருள் கிடங்கு மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியது

ரஷ்யாவின் எல்லைப் பகுதியில் உள்ள எரிபொருள் கிடங்கு ஒன்றின் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளதாக ரஷ்யாவின் தெற்கு பெல்கோரோட் பிராந்தியத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.



ரஷ்யாவும் உக்ரைனும் அதன் எல்லைப் பகுதிகளில் ஒரே இரவில் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனிய இராணுவம், பலம் வாய்ந்த ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி ரஷ்யாவில் எரிபொருள் சேமிப்பு தளத்தைத் தாக்கியுள்ளது.

இதன்காரணமாக பல பகுதிகளில் தீ பரவியுள்ளதாகவும், தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மூன்று இடங்களில் ஆளில்லா விமானம் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்த சம்பவங்களில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

ஒரே இரவில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்களில், சுமி பகுதியில் இருவர் உயிரிழந்தனர். அத்துடன், 4 பேர் காயமடைந்தனர் என உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெல்கோரோட் பகுதியில், 2 சிறுவர்கள் உட்பட 3 பொது மக்கள் காயமடைந்துள்ளனர் என உக்ரைனிய பிராந்தியத்தின் இராணுவ நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# மனித மூளையைப் பாதிக்கும் புதிய வைரஸ் கண்டுபிடிப்பு



சீனாவில் மனித மூளையைப் பாதிக்கும் புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

ஒட்டுண்ணிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் இந்த வைரஸ் “வெட்லேண்ட் வைரஸ்” என்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

சீனாவின் உள்ள ஈரநிலப் பூங்காவில் பணிபுரிந்த 61 வயது முதியவர் ஒருவரிடம் இந்த வைரஸ் முதலில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பிறகு மனித மூளை தொடர்பான கடுமையான உடல்நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யாகி புயல் காரணமாக வியட்நாமில் ஏற்பட்ட மண்சரிவு, வெள்ளத்தில் சிக்கி 59 பேர் பலி

யாகி புயல் காரணமாக வியட்நாமில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு இதுவரை 59 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனா மற்றும் பிலிப்பைன்ஸில் பாரிய அழிவுகளை ஏற்படுத்திய யாகி புயலானது வியட்நாமின் வடகிழக்கு பகுதியைக் கடந்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு ஆசியாவில் ஏற்பட்ட மிகவும் சக்தி வாய்ந்த புயலாக இது கருதப்படுகிறது.

மீட்புப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மண்சரிவுக்குள்ளான பகுதிகளில் வீதிகள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.












# வாக்காளர் அட்டை விநியோகம் 51 சதவீதம் நிறைவடைந்ததாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 51 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் 14 ஆம் திகதியும் விசேட தினமாக அறிவிக்கப்பட்டு வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும் என பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.






# நாகை - காங்கேசன் கப்பல் சேவை 21 ஆம் திகதி தொடக்கம் அதிகரிப்பு

காங்கேசன்துறைக்கும் – நாகபட்டினத்துக்குமிடையில் இடம்பெறுகின்ற பயணிகள் கப்பல் சேவையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிவகங்கை என்ற இந்தக் கப்பல் சேவை, போதிய பயணிகளின் எண்ணிக்கையின்மை காரணமாக வாராந்தம் 3 தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், தற்போது பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், இம்மாதம் 21ஆம் திகதிக்குப் பின்னர் வாராந்தம் 4 நாள்கள் இந்தக் கப்பல் சேவையெள நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 15ஆம் திகதி வரையில் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும் இந்தக் கப்பல் சேவை, 21 ஆம் திகதி முதல் சனிக்கிழமையும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கால்நடைகளை துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கிளிநொச்சி – தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் கால்நடைகளைத் துன்புறுத்திய குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்லாறு பகுதியிலிருந்து அநுராதபுரத்திற்கு 21 ஆடுகளை சுகாதார வசதி, தண்ணீர், காற்றோட்டம், உணவின்றி சிறியரக வாகனத்தில் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனம் முழுமையாக மூடப்பட்டிருந்த நிலையில் கால்நடைகளை வெளி மாவட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான கால்நடை வைத்தியரின் அனுமதிப்பத்திரமின்றி இந்த ஆடுகள் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# 75 மில்லி மீற்றருக்கும் அதிகம் மழை வீழ்ச்சி இன்று பதிவாகும்

மேல், சபரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று 75 மில்லி மீற்ற ருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் மழைப் பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.




# 8 மாதங்களில் 2 பில்லியன் ரூபா ஈட்டியுள்ளதாம் சுற்றுலாத்துறை!

இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் இலங்கை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளதாக மத்திய வங்கித் தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் இலங்கை 2.17 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 66.1 வீத அதிகரிப்பாகும் என மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதுபோல் இந்த வருடம் அந்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், சுற்றுலாப் பயணிகளின் வருகை 50.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அத்துடன், 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1.36 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.



# தேங்காய் விலை அதிகரிப்பு வருட இறுதி வரை நீடிக்கும்

தேங்காய்க்கு சந்தையில் தற்போது நிலவும் விலை இந்த வருட இறுதி வரை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது. தேங்காய் ஏற்றுமதிக்கான தேவை அதிகரித்துள்ளதன் காரணமாக தேங் காய் ஒன்றின் விலை தற்பொழுது 120 ரூபாவாக நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்கல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள், தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை மாவட்ட தேர்தல் செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் அல்லது பெருந்தோட்ட முகாமையாளர் ஊடாக இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# ஒப்ரேஷன் சுமந்திரனா? பொதுவேட்பாளரா?

தமிழ்ப்பொது வேட்பாளரைக் களமிறக்கியதும் அதற்காகத் தமிழ் மக்கள் பொதுச்சபை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு போன்றவற்றை உருவாக்கியதும் சுமந்திரனையும் அவருடைய கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழரசுக் கட்சியையும் முடக்குவதற்காகத்தான் என்பது தெளிவாகியுள்ளது.

தனியொரு சுமந்திரனை அல்லது சுமந்திரனையும் சாணக்கியனையும் எதிர்கொள்வதற்குப் பதிலாக அவர்களைப் பழிவாங்குவதற்காக முழுத் தமிழ்ச் சமூகத்தையும் விலை கொடுக்கத் தயாராகியுள்ளது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு.

இது மிகத் தவறானது. கண்டிக்க வேண்டியது. ஆகவே இதனை சிந்திக்கக் கூடிய அனைவரும் மறுதலித்தே தீர வேண்டும்.

தமிழ்ப்பொது வேட்பாளர் என்பது, "தமிழ் மக்களைத் திரட்டுவது; அல்லது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைப்பது; அல்லது தேசத்தைக் கட்டி எழுப்புவது" என்ற மாய வார்த்தைகளின் பின்னாலான ஒரு சூழ்ச்சியே.

இதனை அவர்களே சொல்வதை அல்லது ஒத்துக் கொள்வதைப் பார்க்கலாம். "ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னார், "சுமந்திரன் நம்பியாராக மாறி அரியனேந்திரனை எம்ஜிஆர் ஆக்கிவிட்டால், இனி நடக்கப் போவது எம்ஜிஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை. தமிழ் கூட்டு உளவியல் என்பது கதாநாயகன் - வில்லன் என்ற துருவ நிலைப்பட்ட மோதலை ரசிப்பது. நமது புராணங்களில் இருந்து திரைப்படங்கள் வரையிலும் அப்படித்தான் காணப்படுகின்றன. இந்நிலையில் தமிழரசுக் கட்சியை தமிழ்க் கூட்டு உணர்வுக்கு மாறாக சஜித்தை நோக்கி திருப்பியதனால் சுமந்திரன் இப்பொழுது வில்லனாக காட்டப்படுவார். அவர் வில்லனாகவும் அரியநேத்திரன் கதாநாயகனாகவும் காட்சிப்படுத்தப்படும் பொழுது அங்கே ஒரு திரைப்படம் ஓடும். அது தமிழ் பொது உளவியலைக் கவரும். இனி தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரச்சாரம் தன்பாட்டில் நடக்கும். கதாநாயகனுக்கு வில்லனுக்கு இடையிலான மோதல். அது அரியனேத்திரனை நோக்கி அதிகம் வாக்குகளை ஈர்க்கும்" என தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்திய தரப்பின் முக்கியமானவரான நிலாந்தன், தன்னுடைய பத்தியில் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே இந்த அடிப்படையில் (சுமந்திரனை எதிரியாக - வில்லனாக - வும் அரியநேத்திரனைக் கதாநாயகனாகவும்) திட்டமிட்டு உருவாக்கியதே தமிழ்ப்பொது வேட்பாளராகும். இப்பொழுது இவர்களுடைய நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது.



கருணாகரன்

ஆக துரோகி - தியாகி, வில்லன் - கதாநாயகன், கறுப்பு - வெள்ளை என்ற சிறுமைப் பார்வையின் தொடர்ச்சியாகவே தமிழ்த்தேசிய அரசியல் முன்னெடுக்கப்படுகிறது. அதிலிருந்து அது விலக வில்லை.

ஆகவே தமிழ்த்தேசிய அரசியல் ஓர் அடி கூட முன்னகரவில்லை. முன்னகரக் கூடிய நிலையிலும் இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், முன்னர் இந்தத் தீவிரத் தமிழ்த்தேசியத் தரப்பினரால் துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், வில்லன்கள், ஒட்டுக்குழுக்கள் என்று கூறப்பட்ட தரப்புகளும் (கருதப்பட்டவர்கள் அல்ல) இப்பொழுது இந்தச் சிறுமை அரசியலுக்குள் சிக்குண்டு சரியான திசையில் அரசியலை முன்னெடுக்கும் சக்திகளை துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், வில்லன்கள், ஒட்டுக்குழுக்கள் என வசைபாடுவதாகும்.

ஆகவே, சிறுமை இருளுக்குள் தொடர்ந்தும் சிக்குண்டிருப்பதுதான் தீவிரத் தமிழ்த்தேசிய அரசியலாக உள்ளது. என்னதான் சாம்பல் அரசியலைப் பற்றிப் பேசினாலும் இருட்டில்தான் (கறுப்பில்தான்) இவர்களுடைய சிந்தனை புதையுண்டிருக்கிறது. அதை மறைப்பதற்காக தமக்குத் தாமே தியாகிகள், கதாநாயகன்கள் என வெள்ளை அடித்துப் பூச்சூடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுமந்திரனை வில்லனாகவும் அரியநேத்திரனை கதாநாயகனாகவும் கற்பனை செய்து கொள்கின்றவர்களுக்குத் தெரியாது, வரலாறு யாரை கதாநாயகராக்கும்? யாரை வில்லராக்கும்? எதனை ஏற்றுக் கொள்ளும்? எதனை நிராகரிக்கும்? என்று.

இதைத் தெரியாமல் தன்னைப் பலி கொடுத்துள்ளார் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள திரு. பா. அரியநேத்திரன். கிழக்கிலே சாணக்கியன் மீதான வெறுப்புணர்வு பொதுவேட்பாளர் என்ற பொறியை நோக்கி அரியநேத்திரனைத் தள்ளியது.

அப்படித்தான் தமிழரசுக் கட்சிக்குள் திரு. சிவஞானம் சிறிதரனின் அணியும் சுமந்திரனை எதிர்ப்பதற்காகவே பொதுவேட்பாளரை ஆதரிக்கிறது. சுமந்திரன் பொதுவேட்பாளரை ஆதரித்திருந்தால் சிறிதரன் அணி சஜித்தையோ, ரணிலையோ, அநுர

தொடர்ச்சி▼



# ஒப்ரேஷன் சுமந்திரனா? பொதுவேட்பாளரா?

தொடர்ச்சி▲

வையோ ஆதரித்திருக்கும்.

இதேவேளை சாணக்கியில்ன் பொது வேட்பாளரை எதிர்ப்பதும் கூட சுமந்திரனுக்காகத்தான். அவர் சுமந்திரனை எதிர்ப்பவராக இருந்திருந்தால், பொது வேட்பாளரை ஆதரித்திருப்பார்.

ஆக மொத்தத்தில் சுமந்திரனை மையமாக வைத்தே பொதுவேட்பாளர் என்ற எதிரும் புதிருமான நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

உண்மை அப்படியே பளிச்சென வெளிவந்துள்ளது. எத்தனை நாள்களுக்குத்தான் அதைப் பொத்தி மறைக்க முடியும்?

தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிக்கின்ற ஈ.பி. ஆர்.எல்.எவ்., தமிழரசுக் கட்சிக்குள்ளிருக்கும் சிறிதரன் அணி, அரைகுறையாகப் பொதுவேட்பாள ருக்கான ஆதரவை வழங்கும் ரெலோ, புளொட் போன்றவற்றுக்கெல்லாம் சுமந்திரனே எதிரி. மட்டுமல்ல, தீவிரத் தமிழ்த்தேசிய நிலைப்பாடுடைய பத்தி எழுத்தாளர்களுக்கும் சுமந்திரனைப் பிடிப்ப தில்லை. மட்டக்களப்பில் பிள்ளையானையும் விட சாணக்கியனை எதிர்க்கின்ற தமிழ்த்தேசியத் தரப்பினர் உள்ளனர்.

இந்த வெறுப்புக்குக் காரணம், சுமந்திரனுடைய அரசியல் முன்னெடுப்பேயாகும். இதை வகைப்படுத்தி நோக்கலாம்.

1. தமிழ்த்தேசிய அரசியலைத் தீவிர நிலையில், புலிகளின் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாது. அப்படி முன்னெடுத்தால் அது உள்நாட்டிலும் சர்வ தேச ரீதியாகவும் பிராந்திய (இந்திய) நிலையிலும் மேலும் நெருக்கடியை உண்டாக்கும் என்று சுமந்திரன் சொல்வது. அதாவது, போருக்குப் பிந்திய அரசியல் (Post - War politics) வேறு விதமாகக் கையாள வேண்டியது. அதற்கான பொறிமுறையும் அணுகு முறையும் வேறு என்பது.

2. ஆகவே மென்னிலையிலான தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டும். அவசியமான நிலையில் தேவையான இடங்களில் அரசை ஆதரிப் பது - எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டைக் கொள்வது அவசியம். கண்மூடித்தனமாக ஆதரிப்பதும் அதே மாதிரி எந்த நியாயமற்று தொடர்ச்சியான எதிர்ப் பைக் காட்டுவதும் தவறு. அது பயனற்றது மட்டு மல்ல, மேலும் மக்களுக்கு நெருக்கடியை ஏற்ப டுத்தும் என அவர் வலியுறுத்துவது.

3.கற்பனாவாத அரசியலைத் தொடர்ந்தும் தமி ழர்கள் முன்னெடுக்க முடியாது. அப்படி முன்னெடுத் தால், அது மேலும் பின்னடைவையும் பலவீனத் தையுமே உண்டாக்கும். ஆகவே நடைமுறையை - யதார்த்தத்தை உணர்ந்த அரசியலை முன்னெடுக்க வேண்டும் எனச் சுமந்திரன் கூறுவது.

4. சர்வதேசத்தின் உளநிலை, பிராந்திய சக்தியாக இந்தியாவின் அணுகுமுறை ஆகியவற்றுக்கும் தமிழ் மக்களுடைய நலன், பாதுகாப்பு போன்றவற் றுக்கும் இடையிலான சமனிலை அரசியல் நிலைப் பாட்டைக் கொள்ள வேண்டியது அவசியம். சர்வதே சத்துக்கு நாம் எதைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் முக்கியமானதல்ல, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்பதும் அவ சியம். அதைக் கேட்டு எமக்குப் பொருந்தக் கூடிய ஒரு அரசியல் வடிவத்தை - நிலைப்பாட்டை முன் னெடுக்க வேண்டும். அதுவே சர்வதேச சமூகத்தை எம்மை நோக்கிக் கவர்ந்திழுக்கும் எனச் சுமந்திரன் சொல்வது.

5.ஏனைய தமிழ்த்தேசிய அரசியல் தலைவர்க ளையும் விடச் சுமந்திரன் தன்னுடைய ஆளுமையி னாலும் நிலைப்பாட்டினாலும் இலங்கையிலும் சர்வதேச அரசியல் மட்டங்களிலும் செல்வாக்கைப் பெற்றிருப்பது. இன்றைய தமிழ் அரசியலாளர்களில் சுமந்திரனே தலைமைத்துவ அடையாளத்தைப் பெற்றிருப்பவராகத் துலங்குகிறார். ஏனையோர் அதை மிஞ்ச முடியாத நிலையில் உள்ளனர். உண் மையில் சுமந்திரனையும் விட சுரேஷ், சித்தார்த்தன், செல்வம் போன்றோருக்கு நீண்ட அரசியற் பாரம் பரியமும் அனுபவமும் உண்டு. ஆனால், அவர்களை விடச் சுமந்திரன் முன்னிலையைப் பெற்றிருக்கிறார் என்பது. இது ஏனையோரிடத்தில் உண்டாக்கியிருக்கும் கசப்பு.


6. சேர்ந்துரையாடுவது, கூட்டுத்தீர்மானங்களை மேற்கொள்வது, சேர்ந்தியங்குவது, பிறருடைய கருத்துகளுக்கும் நிலைப்பாட்டுக்கும் செவிகொடுப் பது போன்றவற்றைச் சுமந்திரன் புறக்கணிப்பது. பல சந்தர்ப்பங்களிலும் அவர் ஒரு Politician ஆக இல்லாமல் Police officer ஆகவே நடந்து கொண்டிருப்பது. அதாவது ஜனநாயக அடிப்படைகளைப் பின்பற்றத் தவறுவது.

7. தன்னுடைய நிலைப்பாட்டைச் சமரசமற்றுப் பகிரங்கமாகவும் துணிச்சலாகவும் வெளிப்படுத்துவது. (இதற்கு நேரெதிராகவே இருப்பவர் திரு. சித்தார்த்தன். அவருடைய உள்ளத்திலிருக்கும் அரசியல் நிலைப் பாடு வேறு. அவர் வெளியே செய்து கொண்டிருக்கும் அரசியல் வேறு. இதை அவருடன் நெருக்கமான அனைவரும் அறிவர்). இது உண்டாக்கும் கசப்பு. (இவற்றுக்கு சுமந்திரனிடம் வேறு விதமான பதில்கள் இருக்கலாம். உண்மை, யதார்த்தம் போன்றவற்றைத் தெரிந்து கொண்டே அதைத் தெரியாததைப்போல வேண்டுமென்றே பிடிவாதமாக நடப்போருடன் எப்படி உடன்பாட்டுக்கு வர முடியும்? எப்படித் தொடர்ந்து உரையாட முடியும்? என்று அவர் கேட்கக்கூடும்).

இவ்வாறான காரணங்களால் சுமந்திரன் மீதான கசப்பும் வெறுப்பும் தீவிரத் தமிழ்த்தேசியத் தரப்பினரிடத்தில் மேலோங்கியுள்ளது. அவர்கள் விடுதலைப் புலிகளின் சாயலோடு (விடுதலைப் புலிகளாகத் தீவிரமாகச் செயற்படவோ, தியாகம் செய்யக் கூடியவர்களாகவோ அல்ல) புலிகளின் தியாகத்தில், அவர்கள் விட்டுச் சென்ற அடையாளத் தோடு அரசியலை முன்னெடுக்க விரும்புகின்றனர். அது இலகுவானது எனவும் கருதுகிறார்கள்.

இதையே இப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்றவையும் செய்கின்றன. என்பதால்தான்

தொடர்ச்சி▼





# ஒப்ரேஷன்

## சுமந்திரனா? பொதுவேட்பாளரா?

தொடர்ச்சி▲

இவை தங்கள் முன்னோடிகளின் சுவட்டை மறந்து - மறுத்து, மஞ்சல் - சிவப்பு அடையாளத்தை ஏந்தி நிற்கின்றன. புலிகளின் அடிச்சுவட்டைப் பின்தொடர் கின்றன. ஏறக்குறைய தமது சுய அடையாளத்தை இழந்து தீவிரத் தமிழ்த்தேசியவாத நிலைப்பாட்டுக்கு - கற்பனாவாத அரசியலுக்கு - தம்மைத் தாரை வார்த்துள்ளன.

இவ்வாறு செய்வதன் மூலம் தங்களுடைய கடந்த காலத்தின் இருளடர்ந்த பக்கங்களை மறைத் துக் கொள்ளலாம் என்று அவை கருதுகின்றன. ஆனால், அரசியலில் இந்த மாதிரியான உருமறைப்பு களும் புதிய நாடகங்களும் தற்கொலைக் கொப்பானவை.

இதையெல்லாம் தெரிந்து கொண்டும் இதை ஏன் இவை செய்கின்றன என்றால், சுமந்திரனைத் தோற்கடித்து தமிழ் அரசியற் களத்திலிருந்து ஓரம்கட்டி விட வேண்டும். அடுத்தது, தமிழரசுக் கட்சியை உடைத்துச் சிதைத்து விடலாம் என்ப தற்காகவே.

அவ்வாறே தீவிரத் தமிழ்த்தேசியவாதிகளுக்கும் சில தேவைகள் உள்ளன. தமிழ் - சிங்கள அரசியலை எப்போதும் வில்லன் - கதாநாயகன், துரோகி - தியாகி, கறுப்பு வெள்ளை நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே. அது அதிக சிரமம் இல்லாமல் அரசியல் செய்வதற்கு உதவும் என்பதால். எனவேதான் தொடர்ந்தும் எதிர்ப்பு அரசியல் வலுப்படுத்தப்படுகிறது. அதற்கான நியா யங்கள் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டுச் சோடிக் கப்படுகின்றன.

தமிழரசுக் கட்சியிலுள்ள சிறிதரன் அணிக்கும் சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டிய அவசியம் - தேவை உள்ளது. மாவை சேனாதிராஜா, சிறிதரன் என முன்னாள் - இந்நாள் தலைவர்கள் என இருந்தாலும் நடைமுறையில் தமிழரசுக் கட்சியானது சுமந்திரனின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அல்லது சுமந்திரனை மீற முடியாமலிருக்கிறது.

எனவே தொகுத்துச் சொன்னால், நிறுத்தப்பட்டுள்ள தமிழ்ப்பொது வேட்பாளர் என்பது சுமந்திரனை வீழ்த்துவதற்காக முயற்சிக்கப்படும் ஒரு அரசியல் அஸ்திரமாகும். ஆகவே, இது ஒப்பிரேஷன் சுமந்திரனே!

**(நன்றி: 'பேஜ் தமிழ்' இணையம்)**




# வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள், கொடிகளை அகற்றுங்கள்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வுள்ள வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள், வாசகங்கள், சின்னங்கள், படங்கள், கொடிகளை உடனடியாக அகற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள், வாசகங்கள், சின்னங்கள், படங்கள், கொடிகளை உடனடியாக அகற்றுவ தற்கான திடீர் சோதனை நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு பொலிஸ ாருக்கு மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் மேற்படி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.




### இங்கிலாந்தில் 10 வருடங்களின் பின்

# இலங்கைக்கு டெஸ்ட் வெற்றி



இங்கிலாந்து மண்ணில் 10 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை அணி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது.

இதன் முதலிரு போட்டிகளிலும் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, ஏற்கனவே டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் தன் வசப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு மிடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கடந்த 6ஆம் திகதி தொடங்கி இன்றுடன் முடிந்தது.

த ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியின், முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, 325 ஓட்டங்களையும் இலங்கை அணி 263 ஓட்டங்களையும் வெற்றன. பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, 156 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், 219 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 219 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இலங்கையின் பதும் நிஸங்க தெரிவானார்.

தொடர் நாயகனாக இங்கிலாந்தின் ஜோ ரூட் தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்றபோதும், இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் தொடரைத் தன் வசப்படுத்தியது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இலங்கை அணி விளையாடிய இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

26 வருடங்களுக்கு முன்னர் இந்த மைதானத்தில் இலங்கை அணி முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தது.

1998ஆம் ஆண்டு அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி 10 விக்கெட்களால் வெற்றிபெற்றிருந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.09.2024




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள். பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.09.2024




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப்ப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று அமைதி காணப்படும். இன் றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப் பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணை யாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன் னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்த மும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

